# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 09 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஒக்ரோபர் 05, 2020




## கொரோனா தொடர்பில் அறிய புதிய தொலைபேசி இலக்கம்

கொரோனா தொடர்பில் அறிந்துக்கொள்வதற்கு 24 மணிநேரமும் இயங்கும் 1999 என்ற அவசர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

## அவசர கோரிக்கை

### சனிக்கிழமை இரவு கொழும்பு - யாழ்ப்பாணம் - புங்குடுதீவு வரை பயணித்தோர் தொடர்புகொள்ளவும்

மினுவாங்கொட ஆடைத் தொழிற் சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணுக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப் பட்டுள்ள நிலையில் அவர் யாழ்ப்பா ணத்துக்கு வருகை தந்து வீடு திரும்பிய பயண ஒழுங்குகளை வடமாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர், மருத்து வர் ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

அதனால் அந்தப் பெண் பயணம் செய்த பேருந்தில் பயணம் செய்தவர்கள் சமூக அக்கறை கொண்டு சுகாதாரத் 03

# நேற்று தனிமைப்படுத்தப்பட்ட 430 பேரில் 78 பேருக்கு கொரோனா ஒருவர் புங்குடுதீவைச் சேர்ந்தவர்!

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய 78 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 04 பேர் கம்பகா மாவட்டத்திற்கு வெளியே வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந் துள்ளது. 03



## குருநாகலில் இருவருக்கு கொரோனா

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணி புரிந்த கொரோனா தொற்றுக்கு உள்ளாகியவர்களில் இரு வர் குருநாகலைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு குருநாகல் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் போது, இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த தொற்றாளர்கள் இருவரும் நேற்று உறுதிப்படுத் தப்பட்ட பெண்ணுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் என, குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப் பாளர் வைத்தியர் சந்தன கெதன்கமுவ தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் குருநாகலில் உள்ள நாரம்மல-கல்ஹிட்டியாவ மற்றும் குளயியாப்பிட்டிய நக்காவத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மொனராகலையிலும் ஒருவருக்கு கொரோனா

திவுலபிட்டிய பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்பில் இருந்த மொனராகலையைச் சேர்ந்த கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக ராணுவ தளபதி தெரிவித்துள்ளார். 03

## 1300 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

திவுலபிடிய பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 1,300 மாண வர்கள் தனிமைப்படுத்தலுக் காக, தற்போது அனுப்பப்பட் டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங் கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று தொடர்பிலான நிலைமை தொடர் பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, 03

## மாதகலில் 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

ஹம்பகா மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள் ளான பெண்ணுக்கு ஹம்பகா பொதுவைத்தியசாலையில் சிகிச்சையளித்த தாதிய உத்தி யோகஸ்த்தர் ஒருவர் குடும் பத்துடன் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்துள்ள நிலையில் அவருடன் சேர்த்து 14 பேர் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர். 03

## தகவலை மறைத்தால் கைதாகுவீர்கள்

கொவிட் 19 வைரஸ் தொடர்பில், சுகாதார அதி காரிகள் மற்றும் பொலிஸார் முன்னிலையில் தகவல்களை மறைக்கும் நபர்களை கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவிருந்த அரச கரும மொழித்தேர்ச்சி வாய்மூலப் பரீட்சைகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அரச கரும மொழி ஆணையாளர் நாயகம் பிரின்ஸ் சேனாதீர தெரிவித்துள்ளார்.

## நாவலர் வீதியிலுள்ள அருங்கட்சியகத்தில் பணியாற்றும் பெண் தனிமைப்படுத்தப்பட்டார்

யாழ்.நாவலர் வீதியில் உள்ள தொல்பொருள் திணைக் கள அருங்காட்சியகத்தில் பணியாற்றும் ஹம்பகா மாவட் டத்தை சேர்ந்த பெண் ஒரு வரின் தாயார் ஹம்பகாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த குறித்த பெண்ணும் அவருடைய நண்பரும் யாழ்ப்பாணத்தில் 03

## நாடு முழுவதும் ஊரடங்கு இல்லை வதந்திகளை நம்பவேண்டாம்!

நாளை (06) நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தவறான செய்தி களால் மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கிறது.

மக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதி பதி ஊடகப் பிரிவு அல்லது அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற விசேட ஊடக அறிக்கை இலத்திரனியல் மற் றும் அச்சு ஊடகங்களில் மாத்திரம் வெளியி டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# வடக்கில் தற்போதைய நிலவரம் என்ன?

## சுகாதார துறை அறிக்கை

வடமாகாணத்தில் கொரோனா பரவல் தொடர்பான தற்போதைய நிலவரம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரம், ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட பிரதேசத்தில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய கோரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பணியாளர் பணியாற்றிய இடத்தில் பணிபுரிந்த புங்குடுதீவை சேர்ந்த 2 இளம் பெண்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் கோரோனா தொற்றுப் பரம்பலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இளம் பெண்கள் இருவரும் அவர்களோடு தொடர்பிலிருந்த மேலும் 20 பேரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பிசிஆர் பரிசோதனைகள் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் கோரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பணியாளர் கம்பஹா மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றபோது அவருக்கு சிகிச்சை வழங்கிய தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனது குடும்பத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு சுற்றுலா வந்துள்ளார். அவர் தங்கியிருந்த மாதகலில் அமைந்திருக்கும் கடற்படைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதியிலேயே அவருடன் தொடர்பிலிருந்த 15 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் வாடி அமைத்துத் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சிலர் ஆழ்கடலில் இந்திய மீனவர்களுடன் தொடர்பில் இருந்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்திய மீனவர்களுடன் நேரடித் தொடர்பிலிருந்த 9 பேர் கட்டாய தனிமைப்படுத்தல் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.




இவர்களுடன் தொடர்புடைய ஏனைய 70 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஏற்கனவே பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலதிக தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

# மினுவங்கொடவில் அவசர நிலை

மினுவங்கொட பிரதேசத்தில் அவசர நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு இன்று (05) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டம் மினுவங்கொட, வெயாங்கொட மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் மறுஅறிவிப்பு வரை தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


கோரோனா தொற்றுள்ளவர்கள் கண்டறியப்பட்ட நிலையில் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களை கண்டறிந்து தொற்றுப் பரவலை இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



## மதுபானசாலைகள் பூட்டப்படவில்லை

மதுபானசாலைகளை பூட்டுவது தொடர்பாக உத்தியோகபூர்வமான எந்தவொரு அறிவிப்பையும் நாங்கள் வெளியிடவில்லை. என மதுவரி திணைக்கள ஊடக பேச்சாளர் கபில குமார சிங்க கூறியுள்ளார்.

நாடு முழுவதும் இன்று இரவு 9 மணி தொடக்கம் மதுபானசாலைகள் பூட்டப்படுவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## 2000 பேருக்கு பிசிஆர் பரிசோதனை

திவுலபிடிய பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய 2 ஆயிரம் பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வாறு பிசிஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தியவர்களில் நேற்றைய தினம் கொரோனா தொற்றுறுதியானவர்கள் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலையின் ஏனைய ஊழியர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 16 வயது சிறுமி பாலியல் துஸ்பிரயோகம் குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை!

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு



திருகோணமலை - கிண்ணியா பிரதேசத்தில் 16 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் இன்று (05) குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி கிண்ணியா பெரியாற்றுமுனை பகுதியில் 16 வயது சிறுமி தனிமையாக வீட்டில் இருந்த போது அவரது வீட்டுக்கு அருகிலுள்ள அப்துல் குத்தூஸ் முகமட் அஸ்ரப் என்ற 68 வயதுடைய முதியவர் இறைச்சி காயவைப்பதற்காக தட்டி ஒன்றினை தருமாறு கோரியுள்ளார்.

தட்டி தனது வீட்டில் இல்லை என சிறுமி கூறிய சந்தர்ப்பத்தில் சிறுமியை வீட்டுக்குள் சென்று பார்க்குமாறு கூறி சிறுமி வீட்டுக்குள்ளே சென்ற போது பின்னால் சென்று அவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக சிறுமியின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி பாதிக்கப்பட்டமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் 2019 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 7 ஆம் திகதி இந்த நபருக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப் பகர்வு பத்திரம் ஒன்றினை தாக்கல் செய்தது.

இந்த நிலையில் இன்று குறித்த வழக்கு திருகோணமலை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

குறித்த சந்தர்ப்பத்திலேயே முதியவர் குற்றவாளி என இனங்காணப்பட்ட நிலையில் அவருக்கான தீர்ப்பு இன்றைய தினம் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியனால் திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் 16 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்குமாறும் அப்பணத்தை செலுத்த தவறும் பட்சத்தில் ஐந்து வருடகால கடூழிய சிறைத் தண்டனை வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை 25,000 ரூபாய் பணத்தை அரசுக்கு தண்டமாக செலுத்துமாறும் அந்த பணத்தை செலுத்த தவறினால் 6 மாத கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டுள்ளார்.



# பரீட்சைகள் ஒத்திவைக்கப்படமாட்டாது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பன நடைபெறும் தினங்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை நடத்துவது தொடர்பில் இன்று மாலை அல்லது நாளை அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று முற்பகல் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கு எந்தவொரு தீர்மானமும் இல்லை என்றும் திட்டமிட்ட தினத்தில் பரீட்சை நடைபெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் என்று தெரிவித்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நவம்பர் 6ஆம் திகதி வரை நடைபெறவும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வரும் ஒக்டோபர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பரீட்சைகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற 1911 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் கொரோனா

கிளிநொச்சி - முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வருகைதந்திருந்த நிலையில் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பணிப்பாளர் கூறியிருக்கின்றார்.

இதேவேளை இன்றைய தினம் 114 பேருக்கு நடத்தப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையில் புங்குடுதீவை சேர்ந்த பெண்ணுக்கும் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலைக்கு வந்த 9 மாணவர்களின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு






கம்பஹா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மைய நாள்களில் வருகை தந்த 9 மாணவர்களின் மாதிரிகள் இன்று பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியால் இந்த நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு கோரோனா தொற்று பரவியுள்ளது.

இந்த நிலையில் கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த 9 மாணவர்கள் அவர்கள் தங்கியுள்ள இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் மாதிரிகள் இன்று பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பிசிஆர் பரிசோதனை அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமையே கிடைக்கப்பெறும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நேற்று தனிமைப்படுத்தப்பட்ட...

இவர்கள் யாழ். புங்குடுதீவு, மொனராகலை, நாரம்மலை மற்றும் குளியாப்பிட்டிய பிரதேசத்தை சேரந்தவர்கள் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் நேற்று தனிமைப்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருபெண்ணிற்கே தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை பெண் பணியாளருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினமிரவு கண்டறியப்பட்டுள்ள நிலையில் அங்கு பணி புரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவர் உள்பட அவர்களுடன் தொடர்புடையவர்கள் என 20 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை ஆடைத் தொழிற்சாலையில் புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் ஒருவர் கடந்த 30ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

அவர் கடந்த 4 நாள்களில் பழகியவர்கள் தொடர்பில் தகவல் பெறப்பட்டு அவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணி புரியும் மற்றைய பெண் நேற்று ஞாயிற்றுக்கிழமையே வீடு திரும்பியுள்ளார். அவரது குடும்பமும் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் வீடு திரும்பிய பெண்ணுக்கே கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஏனையவர்கள் எவருக்கும் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது.

## அவசர கோரிக்கை...

துறையுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோரோனாவால் பாதிக்கப்பட்ட பெண், கொழும்பு புறக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு Ran Silu – WP ND 6500 என்ற பேருந்தில் பயணித்துள்ளார். அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (ஒக்.4) அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து NP ND 8790 இலக்கமுடைய ஆயவாய என்ற பேருந்தில் அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு புங்குடுதீவை காலை 7 மணிக்குச் சென்றடைந்துள்ளார்.

எனவே கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேற்படி இரண்டு பேருந்துகளிலும் பயணித்தவர்கள் உடனடியாக வடமாகாண சுகாதார திணைக்களத்தின் 021 222 6666 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

## நாவலர் வீதியிலுள்ள...

தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி பெண்ணின் தாயார் கொரோனா தொற்று பரவிய ஆடை தொழிற்சாலையில் பணியாற்றிவரும் நிலையில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் ஹம்பகாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந் நிலையில் குறித்த பெண் தனது நண்பருடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளார். குறித்த விடயம் யாழ்.மாநகரசபையின் சுகாதார பிரிவுக்கு தெரியவந்த நிலையில்,

குறித்த பெண் தங்கியுள்ள இடத்திலும், அவருடைய நண்பர் பணிபுரியும் யாழ்.கோட்டையிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் பீதியடையாமல் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு யாழ்.மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் கேட்டுள்ளார்.

## மாதகலில்...

யாழ்.மாதகல் பகுதியில் கடற்படையினால் நடத்தப்படும் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த நிலையில் அவர் அடையாளப்படுத்தப்பட்டு அங்கேயே தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பாக இன்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். விடயம் தொடர்பாக மேலும் அவர் கூறுகையில், தற்போதுஹம்பகாமாவட்டத்திலிருந்து தொழிலுக்காவும் பல்கலைகழகத்திற்கும் வருவோர் தற்காலிக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றார்.

## 1300 மாணவர்கள்...

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை கண்டறியும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மொனராகலையிலும்...

குறித்த பெண் திவுலபிட்டியவில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றி வந்தவர் என தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் தொடர்பில் இருந்த 73 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிக்பொஸ் தர்ஷன் மீது 3 பிரிவுகளின்கீழ் வழக்குத் தாக்கல்

பிக்பொஸ் தர்ஷன் மீது 3 பிரிவுகளின்கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

திருமணம் செய்வதாக கூறி 2 ஆண்டுகளாக காதலித்து நிச்சயம் செய்துவிட்டு ஏமாற்றியதாக நடிகை சனம் செட்டி அளித்த முறைப்பாட்டின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சியின் பிக்பொஸ் நிகழ்ச்சியில் அறிமுகமாகி பிரபல்யமான தர்ஷன் மீது சென்னை அடையாறைச் சேர்ந்த நடிகை சனம் செட்டி 2 ஆண்டுகளாக காதலித்து நிச்சயம் செய்துவிட்டு ஏமாற்றியது உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தார்.

அத்தோடு, 15 இலட்சம் ரூபாய் வாங்கி விட்டு ஏமாற்றியதாகவும் அவர் கூறியிருந்தார்.

இதுகுறித்து அவர் தொடுத்த வழக்கு மீது சைதாப்பேட்டை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தர்ஷன் மீது அடையாறு மகளிர் காவல்நிலையத்தில், பெண் வன்கொடுமை சட்டம், மோசடி உள்ளிட்ட 3 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஒ.ஐ.சி.க்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டவர் கைது

தெஹிவல பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 26 அடையாள அட்டைகள், 88 கடவுச் சீட்டுகள் மற்றும் 3 ஒட்டுனர் அனுமதி பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தேவையற்ற சுற்றுப்பயணங்களில் ஈடுபடவேண்டாம்!



மீண்டும் கொரோனா தொற்று பரவியுள்ள நிலையில் மக்கள் அநாவசிய பயணங்களைக் குறைத்துக்கொள்ளுமாறு பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிகாட்டி ஆலோசணைகளை கடைபிடிப்பது கட்டாயமாகும் என்றும் ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தென்னிலங்கை இளைஞனுக்கு மூன்றாவது முறையாகவும் கொரோனா

ஆணமடுவ, தென்னன்குரியாவ பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவன் மூன்றாவது முறையாகவும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம். பரீட் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி டுபாயில் இருந்து நாடு திரும்பிய குறித்த இளைஞன் வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

பின்னர் பூரண குணமடைந்த குறித்த நபர் ஆணமடுவ, தென்னன்குரியாவ பகுதியில் உள்ள அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி சுகயீனமுற்று சிலாபம் வைத்தியசாலையின் கொரோனா பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் போது அவர் இரண்டாவது முறையாக கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த இளைஞன் இரணவில வைத்திசாலையில் சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

இதனையடுத்து வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த குறித்த இளைஞன் மீண்டும் சுகயீனமுற்ற நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் போது அவர் மூன்றாவது முறையாகவும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டுள்ளது.

# மைத்திரியிடம் ஏழு மணி நேரம் வாக்குமூலம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்கு மூலம் ஒன்றை வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று (05) ஆஜராகியிருந்தார்.

ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுமார் 7 மணி நேர வாக்கு மூலம் ஒன்றை வழங்கிய தன் பின் வெளியேறியுள்ளார்.

# கார் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி! சாரதி கைது!!



மட்டக்களப்பு, கொழும்பு பிரதான வீதி சத்துருக் கொண்டான் பகுதியில் கார் ஒன்றும் மோட்டர் சைக்கிள் ஒன்றும் நேற்று (04) இரவு மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டர் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளதுடன் காரை செலுத்திவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தன்னாமுனை விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஞானசிங்கம் ஜீவானந்தம் என்பவரே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதியில் ஏறாவூர் பகுதில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பிரயபணித்த காரும் மட்டக்களப்பில் இருந்து ஏறாவூர் பகுதிக்கு பிரயாணித்த மோட்டர் சைக்கிளும் நேற்று இரவு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டர் சைக்கிள் பிரயாணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

# நாளை பாராளுமன்ற அமர்வு



பாராளுமன்ற அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்த அமர்வு நாளை (6) தொடக்கம் 9 ஆம் திகதி விரையில் இடம்பெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக்குழுவில் இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் சபை முதல்வர் தினேஸ் குணவர்தன, ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஷ, டளஸ் அளகப்பெரும, மஹிந்த அமரவீர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக நிதி திருத்த சட்ட மூலத்தின் 2 ஆம் வாசிப்பு மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் தொடர்பிலான விவாதம் நாளை இடம்பெறவுள்ளது.

நாளைய தினம் ஆளுங்கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் மாலை 4.30 தொடக்கம் 5.30 வரையில் இடம்பெறும்.

# கல்முனையில் 32 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில், பொதுமக்கள் முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில், பொதுப் போக்குவரத்துகளில் பயணிக்கும் மக்கள் சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டுமென, அவர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் 32 பேர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களின்வீடுகளுக்கு யாரும்செல்லவேண்டாமெனவும், சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வெளியில் செல்ல வேண்டாமெனவும், இதனை உதாசீனம் செய்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், பணிப்பாளர் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களில் இருந்து எமது பிரதேசத்துக்கு வருபவர்கள் தொடர்பாக அறிவிக்குமாறும் கேட்டுள்ள அவர், பொதுமக்கள் ஒன்றுகூடும் சந்தைகள், வணக்கஸ்தலங்கள் ஆகிவற்றில் சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும், கேட்டுள்ளார்.

இது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளில், சுகாதாரப் பகுதியினர் சிவில் உடையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.